*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 455/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திரு.செல்வராஜ் த/பெ. முத்து***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.06.2025.**

துவக்க நேரம் 12.15 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கரியகோவில் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2022ம் தேதி தலைவாசல் காவல் நிலையத்தில் காலை 07.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபொழுது எனக்கு கிடைத்த தகவலின் பேரில் என்னுடன், மு.நி.கா திரு.வெங்கடேஷ் மற்றும் காவலர் திரு.சுரேஷ் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு, பூமரத்துப்பட்டி, முட்டல் பகுதியில் ரோந்து சென்றோம்.

2) அன்று காலை 08.00 மணியளவில் ஒற்றைகுழல் நாட்டுத்துப்பாக்கியுடன் வனப்பகுதியில் சுற்றிக்கொண்டிருந்தவர், எங்களை பார்த்ததும் தப்பிக்க முற்பட்டபொழுது, அவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க, அவர் தனது பெயர் அண்ணாமலை த.பெ ஆண்டி என்று கூறினார்.

3) பின்பு எதிரி அவரது கையில் வைத்திருந்த நாட்டுத்துப்பாக்கியை குறித்து அவரிடம் விசாரித்தபொழுது, அவரிடம் நாட்டுத்துப்பாக்கி வைத்திருப்பதற்கான எவ்வித அரசு உரிமமும் இல்லை என்று தெரியவந்தது. அங்கு வரவழைக்கப்பட்ட சாட்சிகளான மணிவிழுந்தான் VAO திரு.ஆனந்தகுமார் மற்றும் அவரது உதவியாளர் திரு.கலைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் எதிரியை அன்றுகாலை 08.15 மணியளவில் கைது செய்து, பின்பு எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து, கையெழுத்து பெற்றேன். **(ஒப்புதல்**

**வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த ஒற்றைக்குழல் நாட்டுத்துப்பாக்கியை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். **(கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) பின்னர் அன்றே காலை 10.00 மணியளவில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். ( **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.த.சா.ஆ.3, 4 ஆக குறியீடு செய்யப்படுகின்றன).**

6) பின்னர் வழக்கின் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து, நிலைய குற்ற எண்.47/2022, ச.பி 25(1)(a) of Arms Act –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7) பின்பு எதிரியை திரேக சோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான ஒற்றைக்குழல் நாட்டுத்துப்பாக்கியை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(படிவம் 91 அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

8) பின்பு வழக்கின் சாட்சிகளான மணிவிழுந்தான் VAO திரு.ஆனந்தகுமார், அவரது உதவியாளர் திரு.கலைச்செல்வன், மு.நி.கா திரு.வெங்கடேஷ் மற்றும் காவலர் திரு.சுரேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கு கோப்பை தொடர் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 12.29 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.20 17:44:00 +0530

Judicial Magistrate No.2, Attur.